## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-4 - மண்ணை
### (கலந்த எம்பெருமான் மறைய நிற்க, பிறிவாற்றாத நிலையில் போலிகண்டு மேல்விழுந்து வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைக்கும் பாசுரம்)

3040 * மண்ணை இருந்து துழாவி *
வாமனன் மண் இதுவென்னும் *
விண்ணைத் தொழுது அவன் மேவு *
வைகுந்தம் என்று கை காட்டும் **
கண்ணையுண்ணீர் மல்க நின்று *
கடல்வண்ணன் என்னும் அன்னே! * என்
பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு *
என் செய்கேன்? பெய்வளையீரே! 1

3041 பெய்வளைக் கைகளைக் கூப்பிப் *
பிரான் கிடக்கும் கடல் என்னும் *
செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச் *
சிரீதரன் மூர்த்தி ஈதென்னும் **
நையும் கண்ணீர் மல்க நின்று *
நாரணன் என்னும் அன்னே! * என்
தெய்வ உருவில் சிறுமான் *
செய்கின்றது ஒன்றறியேனே 2

3042 அறியும் செந்தீயைத் தழுவி *
அச்சுதன் என்னும் மெய்வேவாள் *
எறியும் தண்காற்றைத் தழுவி *
என்னுடைக் கோவிந்தன் என்னும் **
வெறிகொள் துழாய்மலர் நாறும் *
வினையுடையாட்டியேன் பெற்ற *
செறிவளை முன்கைச் சிறுமான் *
செய்கின்றதென் கண்ணுக்கொன்றே 3

3043 ஒன்றிய திங்களைக் காட்டி *
ஒளிமணி வண்ணனே! என்னும் *
நின்ற குன்றத்தினை நோக்கி *
நெடுமாலே! வா என்று கூவும் **
நன்று பெய்யும் மழை காணில் *
நாரணன் வந்தான் என்று ஆலும் *
என்றின மையல்கள் செய்தார் *
என்னுடைக் கோமளத்தையே 4

3044 கோமள வான்கன்றைப் புல்கிக் *

கோவிந்தன் மேய்த்தன என்னும் *
போமிள நாகத்தின் பின் போய் *
அவன் கிடக்கை ஈதென்னும் **
ஆமள ஒன்றும் அறியேன் *
அருவினையாட்டியேன் பெற்ற *
கோமளவல்லியை மாயோன் *
மால் செய்து செய்கின்ற கூத்தே 5

3045 கூத்தர் குடமெடுத்து ஆடில் *
கோவிந்தனாம் எனா ஓடும் *
வாய்த்த குழல் ஓசை கேட்கில் *
மாயவன் என்று மையாக்கும் **
ஆய்ச்சியர் வெண்ணெய்கள் காணில் *
அவன் உண்ட வெண்ணெய் ஈதென்னும் *
பேய்ச்சி முலை சுவைத்தாற்கு * என்
பெண்கொடி ஏறிய பித்தே! 6

3046 ஏறிய பித்தினோடு * எல்லா
உலகும் கண்ணன் படைப்பென்னும் *
நீறு செவ்வேயிடக் காணில் *
நெடுமால் அடியார் என்றோடும் **
நாறுதுழாய் மலர் காணில் *
நாரணன் கண்ணி ஈதென்னும் *
தேறியும் தேறாதும் மாயோன் *
திறத்தனளே இத்திருவே 7

3047 திருவுடை மன்னரைக் காணில் *
திருமாலைக் கண்டேனே என்னும் *
உருவுடை வண்ணங்கள் காணில் *
உலகளந்தான் என்று துள்ளும் **
கருவுடைத் தேவில்கள் எல்லாம் *
கடல்வண்ணன் கோயிலே என்னும் *
வெருவிலும் வீழ்விலும் மோவாக்[1] *
கண்ணன் கழல்கள் விரும்புமே 8

3048 விரும்பிப் பகவரைக் காணில் *
வியலிடம் உண்டானே! என்னும் *
கரும்பெரு மேகங்கள் காணில் *
கண்ணன் என்றேறப் பறக்கும் **
பெரும்புல ஆநிரை காணில் *
பிரான் உளன் என்று பின் செல்லும் *

[1] ஓவாள்

அரும்பெறல் பெண்ணினை மாயோன் *
அலற்றி அயர்ப்பிக்கின்றானே 9

3049 அயர்க்கும் சுற்றும் பற்றி நோக்கும்[2] *
அகலவே நீள்நோக்குக் கொள்ளும் *
வியர்க்கும் மழைக்கண் துளும்ப *
வெவ்வுயிர்க்கொள்ளும் மெய்சோரும் **
பெயர்த்தும் கண்ணா! என்று பேசும் *
பெருமானே! வா என்று கூவும் *
மயல் பெருங்காதல் என் பேதைக்கு *
என் செய்கேன்? வல்வினையேனே 10

3050 * வல்வினை தீர்க்கும் கண்ணனை *
வண்குருகூர்ச் சடகோபன் *
சொல்வினையால் சொன்ன பாடல் *
ஆயிரத்துள் இவை பத்தும் **
நல்வினை என்று கற்பார்கள் *
நலனிடை வைகுந்தம் நண்ணி *
தொல்வினை தீர எல்லாரும் *
தொழுதெழ வீற்றிருப்பாரே 11

**அடிவரவு:** மண் பெய்வளை அறியும் ஒன்றிய கோமள கூத்தர்
ஏறிய திரு விரும்பி அயர்க்கும் வல்வினை வீற்று

[2] நோக்கி